திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் போலீஸ் குவார்ட்டர்ஸ் கட்ட நில ஆர்ஜிதம் செய்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னிடம் இருக்கும் தகவல்படி அங்கெல்லாம் விடு கட்டுவதாக உத்தேசம் இல்லை.

* 1017 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Police quarters proposed to be taken up for construction during 1962-63; and

(*b*) the places where such buildings are proposed to be constructed in North Salem district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Three hundred and thirty three.

(*b*) (1) Kaveripatnam.

(2) Shoolagiri.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: காவேரிப்பட்டினத்தில் காவல் நிலைய விடுகள் கட்டுவதற்கு ஏற்கெனவே ப்ரபோசல் இருந்தது. அது எந்த நிலையில் உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த வருஷம் செலவாகும் தொகை இப்பொழுது எந்த அளவு குறைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்குத் திட்டங்கள் மாற்றப்பட்டு இருக்கின்றன.

குளங்களும் ஏரிகளும்

1018 கேள்வி.*—திரு. புலவர் கா. கோவிந்தன்:** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் ஏரியில் தூர்ந்து கிடைக்கும் மண்ணை வார என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

கனம் திரு. பூ. கக்கன்: இப் பணிக்கு ஆகும் செலவுப் புள்ளிகளை அனுப்பும்படி கேட்டிருக்கிறோம். இவை கிடைத்ததும் அதிக அளவு செலவை நிச்சயித்து வேலையை விரைவில் எடுத்துக் கொள்வோம். லாரிகளையும் வண்டிகளையும் வைத்து மண்ணைக் கரையின் மேல் கொட்ட முடியுமா என்பதையும் பரிசீலித்து வருகிறோம்.

புலவர் கா. கோவிந்தன்: இந்த ஏரி, பாலாற்று நீர் நேரடியாகப் பாய்கின்ற ஏரி. நீண்ட காலமாக மணல் மேடிட்டு தூர்ந்து போய் இருப்பதால் அந்த மண்ணை வாரி எடுப்பதற்கு அவசர நடவடிக்கை அரசாங்கம் எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஏரி பெரிய ஏரி. இதை ஆழப்படுத்துவதற்கு ஏற்கெனவே ஒரு லட்சத்தி அறுபதினாயிரம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. இந்த வேலையை எடுத்துக்

கொள்வதற்கு காண்ட்ராக்டர்களுக்கு மூன்று முறை முயற்சி செய்தும் ஒரு காண்ட்ராக்டர்கூட முன்வரவில்லை. ஆகையால் இந்த வேலை அங்குள்ள கிராம மக்களுக்கு ஜாப் வொர்க்ஸாகக் கொடுப்பதற்குக்கூட அரசாங்கம் முன்வந்தது. ஆனல் யாரும் அந்த வேலையை எடுத்துக்கொள்ள முன்வரவில்லை. ஆகவே இப் பொழுது கொடுக்கப்படும் ரேட்டை அதிகமாகச் செய்யலாமா அல்லது லாரிகள் மூலமாக இந்த மண்ணை எல்லாம் எடுக்கலாமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இம்மாதிரி நம் ராஜ்யத்தில் அதிக மான ஏரிகள் தூர்ந்து போய் இருக்கின்றன. காண்ட்ராக்டர்களும் அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கு முன்வரவில்லையென்றல், அரசாங்கமே அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கு யோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் கண்ட்ராக்டர்கள் வர வில்லையோ, அங்கெல்லாம் டிபார்ட்மெண்ட் வேலையை எடுத்து நடத்துகிறது. காண்ட்ராக்டர்கள் வருகிற இடத்தில் சாதாரண மாக வேலை நடைபெற்றுவருகிறது.

* 1019 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வடாற்காடு மாவட்டம் செய்யாறு வட்டத்தில் எத்தனை ஏரிகளில் மண் வார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு பூ. கக்கன் : ஒன்று.

* 1020 கேள்வி.—**திரு. க. ர. முனிரத்தினம் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஆற்காடு தொகுதியில் திமிரி பிர்க்காவிலுள்ள வெங்கடாவரம் பக்கத்திலிருந்து திமிரி முதலிய ஊர்களிலுள்ள ஏரிகளுக்கு வரும் கால்வாய்கள் தூர்ந்திருப்பதைச் சீர்படுத்தத் திட்ட முண்டா ?

கனம் திரு. பூ. கக்கன்.—இல்லை, ஐயா.

* **1021 *Q.*—PULAVAR K. GOVINDAN (on behalf of SRI MUNU ADHI)** : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of tanks proposed to be repaired during 1962 in the Chingleput district and their estimated cost;

(*b*) how many have been repaired during the year 1961; and

(*c*) the expenditure incurred for the repairs in 1961?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 373 tanks at an estimated total cost of Rs. 42,25,950.

(*b*) 488 tanks

(*c*) Rs. 26,69,049.